பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 20 | சனிக்கிழமை | 24.05.2025 | அதிர்வு 293

## அம்பிட்டிய ரத்ன தேரர் பிணையில் விடுவிப்பு



(பாறுக் ஷிஹான்)

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து குழப்ப நிலைமையைத் தோற்றுவித்தார் 06

# காணி பற்றிய வர்த்தமானி இரத்துச் செய்யப்படுமா? அடுத்த தடவை சந்திப்பின்போது பதில் அளிக்கப்படும்

## வடக்கு, கிழக்கு எம்.பிக்களிடம் பிரதமர் உறுதி



வடக்கு மாகாணத்தில் சுமார் 5 ஆயிரத்து 700 ஏக்கர் வரையான காணிகள் தொடர்பில் கடந்த மார்ச் 28ஆம் திகதி வெளியான வர்த்தமானி குறித்து அமைச்சரவை மட்டத்தில் பேசி அடுத்த நாடாளுமன்ற 07

# இனப்படுகொலையை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கை அரசுக்கு முதுகெலும்பு இல்லை!

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தின் கருத்துக்குக் கஜேந்திரகுமார் எம்.பி. பதிலடி



**"இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாகக் குறிப்பிடுபவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்ட கருத்தை வெளிவிவகாரத்துறை அமைச்சர் விஜித ஹேரத் உடனடியாக மீளப் பெற வேண்டும். இனப்படுகொலை குற்றச்சாட்டை எதிர்கொள்ள இலங்கைக்கு முதுகெலும்பு இல்லை. அரசின் நிலைப்பாடு கேலிக்கூத்தானது. நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும்."**

**- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.** 06

# அரசின் காணி அபகரிப்பு வர்த்தமானிக்கு எதிராக சட்ட நடவடிக்கைக்கு சட்டத்தரணிகள் குழாம் தயார்

## நாளை வெற்றிலைக்கேணியில் நில உரிமையாளர்களுடன் சந்திப்பு

(ந.லோகதயாளன்)

காணி அபகரிப்பு நோக்கத்துடன் 28/03/2025 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானியை இரத்துச் செய்வது தொடர்பில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கைவிரித்தமையால் நாளை ஞாயிற்றுக்கிழமை நில உரிமையாளர்களைச் சந்தித்து சட்ட நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யவுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் 07






'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பார்கள். அது உண்மைதான் போலும்.

உயிராபத்து அபாய நிலையில் உள்ளவர்கள், நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்காமல் சிறைச்சாலைகளில் இருந்தவாறு வழக்கு விசாரணைகளில் பங்கு பற்றவும், அதேபோல வெளிநாடுகளில் உள்ளவர்கள் ஏதேனும் வழ்க்கு விசாரணைகளுக்காக இலங்கைக்கு வருகை தராமல் அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் இருந்தபடி இலங்கையில் நடைபெறும் விசாரணைகளுக்கு சாட்சியமளிக்கவும் வழி செய்யும் குற்றவியல் நடவடிக்கைச் சட்ட கோவைக்கான திருத்தச் சட்டமூலம் இப்போது நாடாளுமன்றுக்கு வந்திருக்கின்றது.

புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகள், பாய்ச்சல்களுக்கு ஏற்ப இந்தச் சட்ட திருத்தம் கொண்டு வரப்படுதாக கூறப்பட்டாலும், இப்போது இது கொண்டு வருவதற்கு பின்னால் வேறு விடயங்களும் – உள்நோக்கங்களும் – புதைந்திருக்கின்றன எனச் சட்டவட்டாரங்களில் பேசப்படுகிறது. 06




# வவுனியா வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகள், படையினரின் சீருடைகள் மீட்பு

## விசேட அதிரடிப்படை வீரர் உட்பட இருவர் கைது!

(கி.வசந்தன்)

வவுனியா போகஸ்வெவ சலினிகம கிராமத்தில் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் சீருடைகளுடன் நேற்று மாலை இருவர் கைது செய்யப்பட்டனர் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, அந்தப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றைப் பொலிஸார் சோதனை செய்தனர். இதன்போது வீட்டில் இரண்டு கிராம் கேரள கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அந்த வீட்டை மேலும் சோதனை செய்த போது, துப்பாக்கி ரவைகள் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் சீருடைகளும் கண்டு பிடிக்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



அந்த வீட்டிலிருந்து ரி-56 வகை துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 296 ரவைகள்,இ12-போர் வகையை சேர்ந்த 27 ரவைகள், எம்-16 துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 19 ரவைகள், ரி-56 வகை துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் ரவைகளின் தொகுப்பு, ரி-56 துப்பாக்கிப் பயிற்சிக்கு பயன்படுத்தப்படும் 124 பயிற்சி ரவைகள், 9 மில்லிமீற்றர் தானியங்கி கைத் துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 365 வெற்று ரவைகள் மற்றும் 24 பயன்படுத்தப்பட்ட ரி-56 வெற்று ரவைகள் என்பன மீட்கப்பட்டன.

அவற்றுடன் இராணுவ மற்றும் விசேட அதிரடிப்படை சீருடைகள், அதற்கான பிரத்தியேகப் பொருள்கள், காலணிகள், கால்சட்டை, தொப்பிகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

பொலிசாரின் விசாரணைகளில் வீட்டின் உரிமையாளர் பொலிஸ் விசேட அதிரடிப் படை வீரர் என்பதும், அவர் இந்தப் பொருகளை வீட்டில் மறைத்து வைத்திருந்தமையும் தெரியவந்துள்ளன.

வீட்டின் உரிமையாளரான விசேட அதிரடி படை வீரரும், பொலன்னறுவை, ஹிங்குராக்கொடை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு தடுப்புக்காவலில் விசாரிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# காணி அபகரிக்கும் அரச திணைக்களங்கள்
# பிரதமரிடம் பட்டியலிட்டார் ரவிகரன் எம்.பி.

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் வன வளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் உள்ளிட்ட அரசதிணைக்களங்கள் மக்களின் காணிகளை அபகரிப்பதில் தீவிரமாகச் செயற்படுகின்றமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால், பிரதமர் ஹரிணி அமரசூரியவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏ.சிபாம், தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் உள்ளிட்ட கிராமங்கள் இதுவரை மீளக்குடியமர்த்தப்படாமல் காணப்படுகின்றமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தக் கிராமங்களை உடனடியாக மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பிரதமரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றக் கட்டத்தொகுதியில் நேற்று பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தலைமையில் வடபகுதிக் காணப் பிரச்சினைகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனஜீவ ரசிகள் திணைக்கம், வனவளத்திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பன மக்களுக்குரித்தான பெருமளவான காணிகளை அபகரித்துள்ள நிலமைகள் இதன்போது ரவிகரனால்





பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அத்தோடு மக்கள் திருட்டுத் திணைக்களங்கள் எனச் சுட்டிக்காட்டும் அளவிற்கு, இந்தத் திணைக்களங்களின் அபகரிப்பு நடவடிக்கைகள் தீவிரமாகக் காணப்படுகின்றமை தொடர்பிலும் எடுத்துக்கூறப்பட்டது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு வனவளத் திணைக்களத்தால் மாத்திரம் மக்களுக்குரிய 02 லட்சம் ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவரால் தெளிவுபடுத்தப்பட்டது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட ஏ.சி.பாம் கிராமம், கரைதுறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் ஆகிய கிராமங்கள் இதுவரை மீளக்குடியமர்த்தப்படாமல் காணப்படுகின்றமைதொடர்பிலும், இந்தக் கிராமங்கள் உடனடியாக மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் அரால் இதன்போது பிரதமரிடம் கோரிக்கையும் விடுக்கப்பட்டது.

இக்கிராமங்களை மீளக்குடியமர்த்தத் தவறினால் அப்பகுதிக்குரிய மக்களுடன் இணைந்து அந்தப் பகுதிகளைத் துப்பரவுசெய்து அப்பகுதிகளில் மக்கள் தாமே மீளக்குடியமரவேண்டிய நிலை ஏற்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறான நிலை ஏற்படாத வகையில் அந்தப் பகுதிகளில் மீளக் குடியமர்த்துவது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் அவர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

மேலும் ஒட்டுசுட்டான் ஏ.சிபாம் கிராமத்தை 1979ஆம் ஆண்டு இலங்கை நில அளவைத் திணைக்களம் அளவீடு செய்து எல்லைக்கல்லிட்ட Top off pp 66 இலக்க வரைபடம் இருக்கும் நிலையில், கடந்த 2012ஆம் ஆண்டு அந்த ஏ.சிபாம் பகுதியை தண்டுவான் ஒதுக்கக்காடு எனப் பிரகடனப்படுத்தி வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை தொடர்பில்ர் ரவிகரனால் பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இந்த நடவடிக்கை பாரதூரமான சட்டமீறல் செயற்பாடெனவும் நாடாளுமன்ற உறுப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டது.









# ‘சஞ்சாரக உதாவ 2025’ கண்காட்சி ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்

நாட்டின் மிகப்பெரிய சுற்றுலா கண்காட்சியான “சஞ்சாரக உதாவ 2025“, நேற்று கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு ணியகம், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு செயற்பாட்டாளர்கள் சங்கம் இணைந்து இந்த கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

250 வர்த்தகக் கூடங்களைக் கொண்ட இந்தக் கண்காட்சி நேற்று ஆரம்பமானதுடன், இன்றும் நடைபெறுகின்றது.











# 16 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு உடன் அமுலாகும் வகையில் இடமாற்றங்கள்



16 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு உடன் அமுலாகும் வகையில் இடமாற்றங்கள் மற்றும் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொழும்பு பல்கலைக்கு புதிய உபவேந்தர் நியமனம்





கொழும்பு பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக பேராசிரியர் இந்திக மகேஸ் கருணாதிலக்க நியமிக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் பேராசிரியர் இந்திக மகேஸ் கருணாதிலகவிற்கு வழங்கப்பட்டது.

பேராசிரியர் இந்திக மகேஸ் கருணாதிலக வைத்தியக் கல்வித்துறையின் முன்னோடி என்பதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் வைத்திய கல்வி தொடர்பிலான முதலாவது பேராசிரியர் என்ற கௌரவத்திற்கும் உரித்தானவர்.

அவர் 2000 ஆம் ஆண்டு ஜுன் மாதத்திலிருந்து கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளராக பணியாற்றியுள்ளதுடன், கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் ஸ்கொட்லண்ட் டண்டீ பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவராவார்.

1921 ஆம் ஆண்டில் இலங்கை பல்கலைக்கழகமாக ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு பல்கலைக்கழகத்தின் 20 ஆவது உபவேந்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புனித ஹஜ்ஜுப்பெருநாளை முன்னிட்டு முஸ்லிம் பாடசாலைகளுக்கு விடுமுறை

புனித ஹஜ்ஜுப்பெருநாளை முன்னிட்டு எதிர்வரும் 06 மற்றும் 09ஆம் திகதிகளில் அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்குவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேற்படி தினங்களுக்குப் பதிலாக எதிர்வரும் 26 ஆம் திகதி மற்றும் 27 ஆம் திகதிகளில் பாடசாலை நடாத்தப்பட வேண்டும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், முஸ்லிம் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை 26 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.




# மோட்டார் போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளருக்கு விளக்கமறியல்

கையூட்டல் குற்றச்சாட்டில் கைதான மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் உள்ளிட்ட மூவரும் ஜுன் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

4 மில்லியன் ரூபா கையூட்டல் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் பேரில் கையூட்டல் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் மோட்டார் வாகன திணைக்களத்தில் இந்த மூவரும் கைது செய்யப்பட்டனர்.

40 லட்சம் ரூபா கையூட்டல் பெற்றுக்கொண்ட நாரஹேன்பிட்ட மோட்டார் வாகன திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் உள்ளிட்ட மூவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பிரதி ஆணையாளர் எனவும் ஏனைய இருவரும் உதவி முகாமையாளர்கள் எனவும் லஞ்ச மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஈஸ்டர் தொடர்க் குண்டுத் தாக்குதல் தொடர்பான சூத்திரதாரிகளை கண்டுபிடித்து, சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிப்போம்' என்று சூளுரைத்த தேசிய மக்கள் சக்தியினர், அந்த விவகாரத்தையொட்டிய விசாரணையில் இதுவரை பெரிதாக எதுவும் வெட்டிப் பிடுங்கவில்லை.

இந்த விடயத்தில் கிறிஸ்தவ திருச்சபை காலக்கெடு விதித்து, அச்சுறுத்தல் கெடுபிடிகளில் ஈடுபட்டதால் அரசாங்கம் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும், முன்னாள் பிரதி அமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையானை பலிகடாவாகக் கைது செய்து, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைத்ததை தவிர வேறு எதுவும் சாதிக்கவில்லை.

அதற்கப்பாலும் ஏதாவது செய்ததாக வேண்டிய - செய்ததாகக் காட்ட வேண்டிய - அரசியல் கட்டாயம் அரசுத் தரப்புக்கு உண்டு. விசாரணகளில் காத்திரமான எந்த முன்நகர்வையும் காட்டாவிட்டால் திருச்சபை மீண்டும் பகிரங்கமாகச் சீறும் நெருக்குவாரத்தை ஆளும் தரப்பு சந்திக்க வேண்டி நேரலாம். அதைத் தவிர்க்கச் செய்வதற்கான நகர்வே இந்தச் சட்டத் திருத்தம் என்று கருதப்படுகின்றது.

பிள்ளயானின் முன்னாள் இணைப்பாளரும் அவரது கட்சியின் முன்னாள் கொள்கைப்பரப்பு செயலாளரும் என்று கருதப்படும் ஆஸாத் மௌலானா என்பவர் இந்த விடயத்தில் வெளிநாட்டில் இருந்தபடி பிள்ளையானுக்கு எதிராகக் கடுமையான குற்றச்சாட்டுகளை சாட்சியமாக அடுக்கி வந்தார் என்பது தெரிந்ததே. 'சனல் -4' அந்த விடயங்களை விலாவாரியாக வெளியிட்டிருந்தது.

மேற்கு நாடு ஒன்றில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ள ஆஸாத் மௌலானா இலங்கைக்கு வந்து பிள்ளையானுக்கு எதிராகச் சாட்சியம் சொல்லத் தயார் இல்லை என்று கூறப்படுகின்றது. இந்தப் பின்புலத்தில், ஈஸ்டர் தொடர்க் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணையில் எந்த முன்னேற்றத்தையும் புதிதாகக் காட்ட முடியாத ஆளுந்தரப்பு, இப்போது இந்தச் சட்ட திருத்தம் மூலம் ஒரு விசாரணை நாடகத்தை மெருகூட்டி ஆரம்பிக்கத் தயாராகி வருவதாக ஊகிக்கப்படுகின்றது.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், வெளிநாட்டில் அகதி தஞ்சம் கோரியுள்ள ஆஸாத் மௌலானா அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் பிரசன்னமாகி, இவ்விடயத்தை ஒட்டி இலங்கையில் நடைபெறும் நீதிமன்ற விசாரணைக்கு இணைய வழியில் முகம் கொடுத்து சாட்சியம் அளிக்க இணங்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

அத்தகைய சாட்சியப் பதிவு ஒன்றை ஆரம்பித்தால் பிள்ளையானுக்கு எதிரான விவகாரங்களை நீண்ட காலத்துக்கு விசாரணைகளாக இழுத்தடித்து, இந்த விடயத்தில் ஏதோ புலன்விசாரணை முன் நகர்ந்துள்ளது, நீதிமன்ற நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெறுகின்றன என்பது போன்ற பம்மாத்தை அரசாங்கம் காட்ட முடியும் என்று கருதப்படுகின்றது.

ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் விசாரணை விவகாரத்தை முழுவீச்சில் நடத்துகிறோம் என்ற கயிற்றை உலகுக்கும் கிறிஸ்தவ திருச்சபைக்கும் வழங்குவதற்காக இந்தச் சட்ட மூலம் இப்போது கொண்டுவரப்பட்டிருப்பதாக சில சட்ட வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

விடயங்களை முடிச்சு போட்டுப் பார்த்தால் அவை சரியானவையாகவே தோன்றுகின்றன. 'சோழியன் குடுமி சும்மா ஆடுவதில்லை'த்தான்....!

\+ + +

முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவில் இருந்து இதோ வருகிறார், இந்த வாரத்தில் வருகிறார் என்றெல்லாம் செய்திகள் வந்தன. அவை உண்மையோ தெரியவில்லை.

ஆனால், நேற்று அவருக்கு எதிரான வழக்கு ஒன்று மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவர் மன்றுக்கு வருகை தரவில்லை.

கதிரையில் இருந்து விழுந்தமையால் அவரது முதுகு நாணிலும் நரம்பிலும் சில பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன, அதனால் அவர் மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார் என்றும், அடுத்த ஆறு மாதங்களுக்கு அவர் பிரயாணம் செய்யக் கூடாது என அவரது அமெரிக்க டாக்டர்கள் ஆலோசனை தெரிவித்து இருக்கின்றார்கள் என்றும் அவரின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

அதனால் வழக்கு விசாரணையை- 6 மாதங்கள் தள்ளி நவம்பர் 21ஆம் திகதிக்கு - நீதிமன்றம் ஒத்தி வைத்தது.

சட்டவிரோதமாக தேடிய 5 கோடி ரூபா பணத்தில் காணி ஒன்றை சவீகரித்தமை தொடர்பாக அவர் மீதும், அவரது சகோதரியுட்பட வேறு மூவர் மீதும் இந்த வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

சுகவீனம் காரணமாக பிரயாணம் செய்ய முடியாது என்று நீதிமன்றத்தில் சாட்டுச் சொல்லி வழக்கை ஆறு மாதங்கள் தள்ளிப் போட வைத்த பஸில் ராஜபக்ஷ் அதற்கிடையில் பிரயாணம் செய்து நாட்டுக்குத் திரும்புவாரா என்பது கேள்விக் குறிதான்....!

# அம்பிட்டிய ரத்ன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் இரண்டு இலட்சம் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டார்.

அம்பாறை மாவட்டத்தின் பண்டாரடுவ பொலிஸ் நிலையத்துக்குள் உட்புகுந்த மட்டக்களப்பு மங்களாராம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமண ரத்ன தேரர், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து குழப்ப நிலைமையைத் தோற்றுவித்தார் என்ற குற்றச்சாட்டில் அம்பாறை மாவட்ட பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

அவர் விசாரணைகளின் பின்னர் அம்பாறைநீதிவான்நீதிமன்றத்தில்ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது நீதிவான் நவோமி விக்கிரமரத்னவால் தலா இரண்டு இலட்சம் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டார்.

அம்பிட்டியே தேரரின் உறவு முறையான நபரின் இரண்டு பிள்ளைகள் பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது பொலிஸார் மோட்டார் சைக்கிளைச் சோதனை செய்தனர். பின்னர் 2 பிள்ளைகளின் தந்தை அங்கு திடீரென மயக்கமடைந்ததால் அவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன் இரண்டு பிள்ளைகளையும் பொலிஸார் அந்த வீதியால் வந்த ஒரு ஓட்டோவில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பி இருந்தனர்.

இரண்டு பிள்ளைகளும் சரியான நேரத்தில் வீடு திரும்பாததால் அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் இரண்டு குழந்தைகளையும் கேட்டு விசாரிப்பதற்காகப் பண்டாரதுவ பொலிஸ் நிலையத்துக்குச் சென்றதுடன் அங்கு பிள்ளைகளை அடையாளம் தெரியாத ஓட்டோ சாரதியிடம் ஒப்படைத்த பொலிஸ் அதிகாரிகளை அவர் திட்டினார்.

பின்னர் அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து குழப்ப நிலைமையைத் தோற்றுவித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் இரண்டு இலட்சம் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டார்.

குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூன் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பிணையில் விடுவிக்கப்பட்ட அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் ஊடகங்களுக்குப் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்.

"இரண்டு பிள்ளைகளை அழைத்துச் செல்லச் சென்ற எனது உறவு முறையானவர் பண்டாரதுவ பொலிஸ் நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் தவறு செய்ததால் கைது செய்யப்பட்டார். ஆனால், பொலிஸார் பிள்ளைகளை முறையாக உரிமையாளர்களிடம் திருப்பி அனுப்பியிருக்க வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

பிள்ளைகள் இருவரும் அடையாளம் தெரியாத ஓட்டோவில் பொலிஸாரினால் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இது முற்றிலும் தவறு. அங்கே 11 வயதில் ஒரு மகளும், ஆறு வயதில் ஒரு மகனும் இருந்தனர். ஓட்டோ சாரதி வீட்டுக்குச் சென்று பிள்ளைகள் இருவரையும் அவர்களின் தாயிடம் ஒப்படைத்ததாகக் கூறுகின்றார். ஆனால், தாய் வெளிநாட்டில் இருக்கின்றார். பொலிஸ் அதிகாரிகள் சிறு பிள்ளைகளுடன் விளையாட அனுமதிக்கப்படக்கூடாது. குழந்தைகள் பாதுகாப்புச் சட்டம் பற்றியும் எங்களுக்குத் தெரியும். சம்பந்தப்பட்ட இரண்டு அதிகாரிகள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." - என்றார்.

# இனப்படுகொலையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம் மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

"தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் வழங்கிய நேர்காணலின்போது இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளதாகக் கூறுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற கருத்தைக் கூறியுள்ளார். இதனை நானும் அவதானித்தேன். இது இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்துக்கு மேற்பட்ட கருத்து. இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அரசின் நகைப்புக்கிடமான, கேலிக்கூத்தான மனநிலையை இந்தக் கூற்று வெளிப்படுத்துகின்றது.

வெளிவிவகாரத்துறை அமைச்சர் என்பவர் சர்வதேசத்துக்குப் பதில்சொல்லக் கூடியவர். ஆகவே, அவர் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்திருக்க கூடாது. இனப்படுகொலை குற்றச்சாட்டை எதிர்கொள்ள இலங்கைக்கு முதுகெலும்பு இல்லை. அதனால்தான் இவ்வாறான பிழையான நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

இனப்படுகொலை என்பது ஒரு குற்றம். இலங்கை ரோம்

07

## இனப்படுகொலையை...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உடன்படிக்கைக்கு உடன்பட வேண்டும்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளது. அது ஒரு மிகப் பெரிய குற்றம். ஆனால், இனப்படு கொலை என்று கூறினால் சட்ட நடவடிக்கை என்ற நிலைப்பாட்டில் அரசு உள்ளது. முந்தைய ஆட்சியாளர்களைக் காட்டிலும் நாம் மாறுபட்டவர்கள் எனக் கூறும் தற்போதைய ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் தொடர்பில் நாம் யோசிக்க வேண்டியுள்ளது.

இனப்படுகொலை தொடர்பில் வழக்குகள் நடக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களினால் வழக்குகள் சுயாதீனமாக தாக்கல் செய்யப்பட வேண்டும். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளதாகக் கூறுபவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்ட கருத்தை வெளிவிவகாரத் துறை அமைச்சர் உடனடியாக வாபஸ் பெற வேண்டும். இந்தக் கருத்து அவர் பதவி வகிக்கும் அமைச்சுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளது. அது தொடர்பில் உங்களால் ஏன் நீதியை நிலைநாட்ட முடியவில்லை? உங்களிடமும் ஒரு குற்ற உணர்வு இருப்பதனால்தான் நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும்." - என்றார்.

---

## அரசின் காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் கூறுகையில்,

"வடக்கில் தமிழர்களின் நில இருப்பை உறுதிப்படுத்த, கடந்த 2025 மார்ச் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட வடக்கு மாகாணத்தில் வவுனியா தவிரந்த நான்கு மாவட்டங்களில் 5,940 ஏக்கர் காணியை அரச காணியாக சுவீகரிக்கும் அரசின் வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக நாம் தொடர்ந்து ஆட்சேபனைகளைத் தெரிவித்திருந்தோம்.

மூன்று மாத காலத்தில் மக்கள் தமது காணிகளுக்கான ஆவணங்களைச் சமர்ப்பித்து உரித்தை உறுதிப்படுத்த வேண்டும் என்ற அந்த நிலைப்பாட்டை அரசு மீளப் பெற வேண்டும் என வலியுறுத்தினோம்.

இவ்வாறான நிலையில் அரசு காணி அமைச்சின் மூலம் ஒரு கடிதம் வெளியிட்ட போதும் அது சட்ட வலுவற்றதாகவே பார்க்கப்படும். பிரதமர் நேற்று வெள்ளிக் கிழமை வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தபோதும் ஓர் உறுதியான பதிலையோ அல்லது வர்த்தமானியை இரத்துச் செய்யும் நம்பிக்கையையோ வழங்காதமையால் நாம் அடுத்த கட்ட நடவடிக்கைக்குத் தயாராகவுள்ளோம்.

இதன் முதல் கட்டமாக 4 மாவட்டங்களிலும் அறிவிக்கப்பட்ட பிரதேசங்களின் நில உரித்தாளர்களுக்குத் தேவையான இலவச சட்ட உதவிகளை வழங்கும் வகையில் அந்த இடங்களுக்கே சட்டத்தரணிகள் குழாம் நேரில் வருகை தரவுள்ளது. இதற்கமைய நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வெற்றிலைக்கேணி ரம்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்தச் சட்ட உதவிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனால் அந்தப் பகுதி மக்கள் இதில் பங்குகொள்ளலாம்.

இதேநேரம் ஏனைய மாவட்டங்களில் இடம்பெறும் பணிகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும்." - என்றார்.

## காணி பற்றிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமர்வின்போது நடைபெறும் சந்திப்பில் பதில் அளிக்கப்படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் நிலவும் காணிப் பிரச்சினைகள் தொடர்பான கூட்டம் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் மக்கள் பிரதிநிதிகளுடன் வடக்கு, கிழக்கு மாகாண மாவட்ட அரச அதிபர்கள், திணைக்கள அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, "வடக்கு மாகாணத்தில் காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பில் கடந்த மார்ச் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியை மீளப் பெற வேண்டும். பொதுமக்களின் காணிகளையும் அரச காணிகளையும் வேறுபடுத்துவது என்பது கடினமான காரியம். காணிகளின் உரிமையாளர்கள் பலர் வெளிநாடுகளில் உள்ளனர். நாட்டில் இன்னமும் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் இருப்பதால் அவர்களில் பலர் நாடு திரும்ப முடியாத நிலையிலுள்ளனர். வர்த்தமானியில் பிரகடனப்படுத்தியதன்படி பல காணிகள் கரையோரத்திலுள்ளன. 2004இல் ஏற்பட்ட சுனாமியால் பலரின் ஆவணங்கள் அழிவடைந்து போய்விட்டன. எனவே, இந்த வர்த்தமானியை மீளப் பெறவேண்டும்." - என்று வலியுறுத்தியதுடன், அதிலுள்ள சட்டப் பிரச்சினைகளையும் இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நிஷாம் காரியப்பர்ஆகியோர் முன்வைத்தனர்.

தொடர்ந்து,"அரசு அடாத்தாகக் காணிகளை அபகரிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. பொதுமக்களின் காணிகளை அவர்களிடமே வழங்க வேண்டும்." - என்று சிவஞானம் சிறீதரன் எம்.பி. கூறினார்.

தொடர்ந்து, வவுனியா மாவட்டத்தில் அபகரிக்கப்படும் காணிகள் தொடர்பில் ப.சத்தியலிங்கம் எம்.பியும், திருகோணமலை மாவட்டத்தில் அபகரிக்கப்படும் காணிகள் தொடர்பில் ச.குகதாசன் எம்.பியும், முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் உள்ளிட்ட திணைக்களங்களால் அபகரிக்கப்படும் காணிகள் தொடர்பில் து.ரவிகரன் எம்.பியும் கூறினர்.

எனினும்,இடையிலேயேஇதனை நிறுத்திய பிரதமர்,"பிரதானமாக வடக்கில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட காணி தொடர்பில் பேசவே இந்தச் சந்திப்பு கூட்டப்பட்டது. நேரத்தைக் கருத்தில் கொண்டு அது தொடர்பிலேயே கலந்துரையாடுவோம்." - என்று கூறினார்.

இதனிடையே, சந்திப்பில் பங்கேற்றிருந்த காணி, திணைக்களங்களின் அதிகாரிகள் வர்த்தமானி மீளப்பெறப்பட வேண்டும் என்ற கருத்தைக் கடுமையாக எதிர்த்தனர். "காணி ஆவணங்கள் இல்லையென்றால் மின் பட்டியல், வரி தொடர்பான ஆவணங்கள் அல்லது வேறு ஆவணங்களில் ஏதேனும் ஒன்றையேனும் மக்கள் ஆதாரமாகக் காட்ட முடியும்." - என்று அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், "நாட்டுக்கு வர முடியாத சூழ்நிலையிலுள்ளவர்கள்மெய்நிகர் வழியில் தொடர்பு கொள்ள முடியும். கிராம சேவகர் மூலம் காணியை உறுதிப்படுத்தலாம். உறவினர்கள் ஊடாக காணி ஆவணத்தை சமர்ப்பிக்க முடியும். எனவே, வர்த்தமானியை மீளப்பெற முடியாது." - என்றும் அவர்கள் கூறினர்.

இதன்போது, "100 வருடங்களுக்கு முந்தைய காணிகளை அடையாளப்படுத்த இந்த நடவடிக்கை என்று கூறப்படுகின்றது. அப்படியானால் தற்போதைய ஆவணங்கள் ஏற்கப்படுமா? அரச மற்றும் தனியார் காணிகளை அடையாளப்படுத்தவே இந்த நடைமுறை என்றால் எதற்காக பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தாமல் 3 மாத காலத்துக்குள் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அரசியல்வாதிகளும் ஊடகங்களும் இந்த விடயத்தை வெளிப்படுத்திய பின்னர்தான் இந்த விடயம் மக்களுக்குத் தெரியவந்துள்ளது. இன்னும் ஒரு மாத காலத்துக்குள் ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாது. மக்களுக்குப் பகிரங்கப்படுத்தாமல் வர்த்தமானியை வெளியிட்டதன் நோக்கம் என்ன?." என்று கஜேந்திரகுமார் எம்.பி., நிசாம் காரியப்பர் எம்.பி. ஆகியோர் அதிகாரிகளைக் கேட்டனர். அவர்களின் இந்தக் கேள்விக்கு அதிகாரிகள் பதிலளிக்கவில்லை.

இதைத் தொடர்ந்து, "பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமிக்கும் நோக்கம் எமக்கு இல்லை. பொதுமக்களின் காணிகளிலிருந்து அரச காணிகளை வேறுபடுத்துவதே நோக்கம். அரச காணிகளில் பொது நோக்கிலான அபிவிருத்தித் திட்டங்களே மேற்கொள்ளப்படும்" - என்று தெரிவித்த பிரதமர் ஹரிணி, "இந்த வர்த்தமானி தொடர்பாக அடுத்த நாடாளுமன்ற அமர்வுக்குள் - அமைச்சரவையில் பேசி முடிவு ஒன்று எட்டப்படும். அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது மீண்டும் உங்களை (வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை) சந்திக்கும்போது பதிலளிக்கின்றேன்." - என்று உறுதியளித்தார்.

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(எஸ்,ரகுதீஸ்)

பயிற்றங் கொடிக்கு குத்துவதற்காக பூவரசம் தடி வெட்டிய குடும்பஸ்தர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மின்சார நிலைய வீதி, சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த இராசமணி ஸ்ரீகாந்தன் (வயது 48) என்ற மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையாவார்.

மேற்படி குடும்பத்தர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (22) பிற்பகல் பழைய பொலிஸ் நிலைய வீதி சுன்னாகம் தெற்கு பகுதியில் உள்ள வீட்டு வேலியில் பயிற்றைக் கொடிக்கு குத்துவதற்காக பூவரசம் தடி வெட்டியுள்ளார்.

இதன்போது நீண்டு வளர்ந்திருந்த பூவரசம்தாடிமின்சாரகம்பிமீதுதொடுகை ஏற்பட்டு அவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். வீதியால் சென்றவர்கள் மூலமே இந்த விடயம் வீட்டாருக்கு தெரியவந்தது.

சடலம் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு நேற்று வெள்ளிக்கிழமை (23) யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு சம்பவ இடத்தையும் பார்வையிட்டார்.

சாட்சிகளை சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர். பிரேத பரிசோதனையில் கடுமையான மின்சாரம் தாக்கி உயிர் இழப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அப் பகுதியில் மின்சார கம்பிகள் காணப்படுகின்ற போதிலும் நீண்டு வளர்ந்திருந்திருக்கும் மரங்களை மின்சார சபையினர் வெட்டாமையினாலேயே இவ் உயிரிழப்பு ஏற்பட்டதாக பிரதேச பொது மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

# தொல்பொருள் திணைக்களத்தின் வெற்றிடங்களை நிரப்ப அனுமதி

தொல்பொருள் திணைக்களத்தில் கடந்த 08 ஆண்டுகளாக நிலவும் 27 உதவிப் பணிப்பாளர் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களை இணைத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரச சேவைக்கான ஆட்சேர்ப்புகளை மீளாய்வு செய்வதற்கான குழு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் பிராந்திய நிர்வாக நடவடிக்கைகள் உள்ளிட்ட சேவைகளை செயற்றிறனுடன் முன்னெடுப்பதில் தடைகள் காணப்பட்டதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் துசித மென்டிஸ் தெரிவித்தார்.

தொல்பொருள் திணைக்களத்தில் நிலவும் 7 பணிப்பாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது அரசாங்கத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

822 காவலர்கள், 305 தொல்பொருள் உதவியாளர்கள் மற்றும் ஊழியர் தர பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியும் அரச சேவைக்கான ஆட்சேர்ப்புகளை மீளாய்வு செய்வதற்கான குழுவிடம் கோரப்பட்டுள்ளதாகவும் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

# கதிர்காமத்துக்கான புனித யாத்திரை காட்டு வழிப்பாதை ஜூனில் திறப்பு



கதிர்காமத்துக்குப் புனித யாத்திரை மேற்கொள்ளும் யாத்திரிகர்களுக்காக குமண தேசிய பூங்கா ஊடான காட்டு வழிப்பாதை அடுத்த மாதம் 20ஆம் திகதி முதல் திறக்கப்படவுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து பயணிக்கும் யாத்திரிகர்களுக்காகவே இந்த காட்டு வழிப்பாதை திறக்கப்படவுள்ளது.

கதிர்காம வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 26ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 11 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்த நிலையிலேயே, யாத்திரிகர்களுக்காக குமண தேசிய பூங்கா ஊடான காட்டு வழிப்பாதை திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3,147 தாதியர்களுக்கான இன்று நியமனக் கடிதங்கள்



தாதியர் சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள 3,147 தாதியர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று வழங்கப்படவுள்ளன.

இதற்கான நிகழ்ச்சி பிரதமர் ஹரிணிஅமரசூரிய தலைமையில் அலரி மாளிகைவளாகத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது, தாதியர் சேவையில் 79 விசேட தர உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான தாதியர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வரவேற்புக்குரிய திருத்தம்

இலங்கையின் குற்றவியல் நடவடிக்கை சட்ட கோவையில் சில திருத்தங்களைக் கொண்டு வரும் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

வளர்ந்து வரும் தொழில்நுட்பப் பாய்ச்சலுக்கு ஏற்ப இலங்கையின் சட்ட விசாரணை முறைமைகளை மாற்றி அமைப்பதற்கு இந்த திருத்தச் சட்டமூலம் வழி வகுக்கின்றது. அதனால் இதனை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட எதிர்க்கட்சியினரும் வரவேற்றுள்ளனர்.

உத்தேச புதிய சட்டமூலத்தின் பிரகாரம் -

உயிரச்சுறுத்தல் அபாய நிலையில் உள்ளவர்கள் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காமல் சிறைச்சாலையில் இருந்தவாறு நீதிமன்ற வழக்கு விசாரணைகளில் பங்குபற்ற முடியும். அதேபோல் வெளிநாடுகளில் உள்ளவர்கள் ஏதேனும் வழக்கு விசாரணைகளுக்காக இனி இலங்கைக்கு வருகைதர வேண்டிய அவசியமில்லை. தாங்கள இருக்கும் நாட்டில் அல்லது அயல் தேசத்தில் உள்ள இலங்கையின் தூதரகத்துக்கு குறிப்பிட்ட நேரத்தில் சமுகமளித்து அங்கிருந்தபடியே இணைய வழி ஊடாக இலங்கையில் நடைபெறும் நீதிமன்ற விசாரணைக்குத் தோற்றி சாட்சியமளிக்க முடியும்.

இந்தச் சட்டமூலத்தை சமர்ப்பித்து உரையாற்றிய நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார கூறியமை போல -

“நாட்டு மக்கள் நீதிமன்றங்களுக்குச் செல்ல விரும்புவதில்லை. சட்டத்தரணிகள் மற்றும் நீதிபதிகள் மாத்திரமே நீதிமன்றத்துக்கு செல்ல விரும்புகிறார்கள். அதுவும் அங்கு அவர்கள் தொழில் புரிவதால். சாட்சியாளர்கள் நீதிமன்றத்துக்கு செல்ல விரும்புவதில்லை. வழக்கு பிற்போடல் மற்றும் அலைகழித்தல் ஆகியவற்றால் நீதிமன்றத்துக்கு செல்வதற்கு பொதுமக்கள் விரும்புவதில்லை. நீதிமன்றங்களில் நேரம் வீண்விரயமாக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன” - என்பவை எல்லாம் உண்மைதான்.

குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் ஏதேனும் வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது வாதியும் இருக்க வேண்டும், பிரதிவாதியும் இருக்க வேண்டும். சந்தேக நபரும், சாட்சியாளரும் நீதிமன்றத்தில் இருக்க வேண்டும். சாட்சிக் கூண்டில் இருந்து சாட்சியமளிக்க வேண்டும். இவர்களில் எவரேனும் நீதிமன்றத்தக்கு சமுகமளிக்காவிடின் வழக்குப் பிற்போடப்படும். இதனால் அன்றைய தினம் வருகை தந்திருந்த ஏனையவர்கள் அனைவரும் பாதிக்கப்படுவார்கள். இத்தகைய பிரச்சினைகளையும் ஓரளவு தவிர்க்க - சம்பந்தப்பட்டோர் தாங்கள் இருக்கும் தொலைவில் இருந்தபடியே விசாரணையில் பங்குபற்ற - இந்தத் திருத்தச் சட்டம் அனுமதிக்கின்றது.

இந்தத் திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக வெளிநாடுகளில் உள்ளவர்கள் ஏதேனும் வழக்கு விசாரணைகளுக்காக இலங்கைக்கு வருகைத் தர வேண்டிய அவசியமில்லை. தான் வசிக்கும் நாட்டில் உள்ள இலங்கைக்கான தூதரகம் அல்லது கொன்சியூலர் பணிமனை ஊடாக நவீன தொழில்நுட்பம் மூலம் விசாரணைகளில் பங்குப்பற்ற முடியும்.

இந்தச் சட்டமூலத்தின் 144 ஆவது பிரிவில் ‘நீதிமன்றத்தின் முன்னிலையில் தனிப்பட்ட முறையில் ஆஜராகாமல், இணைய வழிமுறையில் முன்னிலையாகலாம்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் குற்ற விசாரணை நடைமுறைகளை உலக ஓட்டத்துக்கும், தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் ஏற்ப முன்நகர்த்தும் இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கதே.

# சோனியா காந்தி, ராகுலை சந்தித்தமை குடும்பத்துடன் இருப்பது போன்றது

## மு.க. ஸ்டாலின் நெகிழ்ச்சி



"சோனியா காந்தி மற்றும் சகோதரர் ராகுல் காந்தி ஆகியோரை சந்திப்பது குடும்பத்துடன் இருப்பது போன்ற உணர்வை தருகிறது. டில்லியில் அவர்களது இல்லத்தில் ஒவ்வொருமுறை சந்திக்கும்போதும் ஒரு சிறப்பான அரவணைப்பு கிடைக்கிறது."

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

டில்லியில் இன்று நடைபெறவுள்ள நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று புதுடில்லி சென்றடைந்தார். பின்னர், காங்கிரஸ் நாடாளுமன்றத் தலைவர் சோனியா காந்தியையும், மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தியையும் அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி சந்திப்பு குறித்து முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளன பதிவில்,

"சோனியா காந்தி மற்றும் அன்பு சகோதரர் ராகுல் காந்தி ஆகியோரை சந்திப்பது குடும்பத்துடன் இருப்பது போன்ற உணர்வை தருகிறது. டில்லியில் இவர்களை ஒவ்வொருமுறை சந்திக்கும்போதும் ஒரு சிறப்பான அரவணைப்பு கிடைக்கிறது." என்று பதிவிட்டுள்ளார்.

# குழாயில் உடைப்பால் நடூர் வீதியில் 50 அடி உயரத்துக்கு பாய்ந்த தண்ணீர்

குழாயில் உடைந்ததால் நடூர் வீதியில் 50 அடி உயரத்துக்கு தண்ணீர் பாய்ந்த சம்பவம் மேட்டுப்பாளையத்தில் இடம்பெற்றுள்ளது.

மேட்டுப்பாளையத்தில் உள்ள பவானி ஆற்றில் இருந்து, கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கு தேவையான குடிதண்ணீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்காக வீதியோரம் ராட்சத குழாய்கள் அமைக்கப்பட்டு குடிதண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது. அதன்படி, மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அன்னூர் வீதியில் உள்ள நடூர் வழியாக திருப்பூருக்கு பகிர்மானக் குழாய் செல்கிறது.

இந்நிலையில், நேற்று மதியம் நடூர் பகுதியில் செல்லும் ராட்சத குழாயில், அழுத்தம் தாங்காமல் உடைப்பு ஏற்பட்டது. இதையடுத்து, தண்ணீர் வெளியேறி, சுமார் 50 அடி உயரத்துக்கு நீரூற்று போல் பீய்ச்சியடித்தது. இதைக் காண அங்கு ஏராளமானோர் திரண்டனர். பல லட்சம் லிட்டர் தண்ணீர் வீதியில் வழிந்து வீணாணது. இதனால், அந்த வீதி முழுவதும்



வெள்ளக்காடானது.

மேலும், குழாய் உடைப்பால் அந்த வழியாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவலறிந்து தமிழ்நாடு குடிதண்ணீர் வடிகால் வாரிய அலுவலர்கள், நகராட்சி அலுவலர்கள் சம்பவ இடத்துக்கு வந்து சீரமைப்புப் பணியில் ஈடுபட்டனர். சில மணி நேரத்துக்கு பின்னர், அவ்வழியாக மீண்டும் போக்குவரத்து தொடங்கியது.

# அந்தமானில் ஏவுகணைச் சோதனை; விமானங்கள் பறக்கத் தடை விதிப்பு



அந்தமான் கடல் பகுதியில், மிக அதிக உயரம் பாய்ந்து செல்லக்கூடிய ஏவுகணை சோதனை நடத்தப்படுவதால் அந்த பகுதி வான்வெளியில் விமானங்கள் பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் இந்திய அரசினால் பிரம்மோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதை தொடர்ந்து பாலிஸ்டிக் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டது.

தற்போது, முப்படைகளின் உத்தரவின் பேரில், அந்தமான் கடல் பகுதியில், மிக அதிக உயரம் பாய்ந்து செல்லக்கூடிய ஏவுகணை சோதனை நடத்தப்படுகிறது. இதனால் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இன்று காலை 7 மணி முதல் 10 மணி வரை அந்தமான் நிக்கோபார் தீவுகளை சுற்றிய 500 கிலோ மீற்றர் நீள வான்வெளியில் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இந்தியாவுடனான உறவுகளை அதிகரிக்க 49 சதவீத பாகிஸ்தானியர்கள் ஆதரவு

இருதரப்பு உறவுகளை இயல்பாக்குவதற்காக இந்தியாவுடனான வர்த்தக உறவுகளை அதிகரிக்க வேண்டும் என்று 49 சதவீத பாகிஸ்தானியர்கள் தெரிவித்திருக்கின்றனர் என ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர்.

இதனைத்தொடர்ந்துஇருநாடுகளுக்குமிடையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வந்தன.

இந்தநிலையில், போர்நிறுத்தத்துக்குப் பிறகு இந்தியாவுடனான உறவுகளை அதிகரிப்பதற்கு 49 சதவீதத்தினர் ஆதரவளித்துள்ள நிலையில், 35 சதவீத பாகிஸ்தானியர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தற்போது நிலுவையில் உள்ள அனைத்து பிரச்சினைகளும் தீர்க்கப்படும் பட்சத்திலேயே தாமும் தமது ஆதரவை வழங்குவதாக அதனை எதிர்க்கும் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

# பிரித்தானியா, பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகள் படுகொலை செய்தவர்களுக்கு ஆதரவளிக்கின்றன

## பெஞ்சமின் நெதன்யாகு தெரிவிப்பு




பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் கனடா ஆகிய நாடுகளின் தலைவர்கள் "படுகொலை செய்தவர்களுக்கும் கடத்தல்காரர்களுக்கும் ஆதரவாக இருக்கின்றன என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் வொஷிங்டன் டி.சியில் இரண்டு இஸ்ரேலிய தூதரக அதிகாரிகள் கொல்லப்பட்டமை தொடர்பில் தமது எக்ஸ் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மேற்படி நாடுகளின் தலைவர்கள் ஹமாஸுடன் இணங்கி செயற்படுவதாகவும் இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார்.

# ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 50 வீத வரி

## அமெரிக்கா எச்சரிக்கை



ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்காக 50 சதவீதம் தீர்வை வரி விதிப்பதற்கு, தான் பரிந்துரை செய்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்காவில் தயாரிக்கப்படாத APPLE IPHONEகளுக்காக 25 சதவீதம் இறக்குமதி வரி விதிப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக டொனால்டு ட்ரம்ப் தனது ட்ரூத் சோஷியலில் வெளியிட்டுள்ள ஒரு பதிவில்,

"அமெரிக்காவில் விற்கப்படும் ஐபோன்கள் அமெரிக்காவிலேயே தயாரிக்கப்பட வேண்டும் என்று நான் நீண்ட காலமாக ஆப்பிள் நிறுவனத்தின் டிம் குக்கிடம் தெரிவித்து வருகிறேன். அவை இந்தியாவிலோ அல்லது வேறு எங்குமோ தயாரிக்கப்படக் கூடாது. இது நடக்கவில்லை என்றால், குறைந்தபட்சம் 25% கட்டணத்தை ஆப்பிள் நிறுவனம் அமெரிக்காவுக்கு செலுத்த வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம் பெயர் சட்டவாளர்.**

**இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.**



**ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.**

30

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



படையினரின் யுத்த வெற்றிக் கொண்டாட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் ஏனையோரும்.

தேர்தல் காலங்களில், வழங்கப்பட்ட வாக்குறுதிகளும், ஜனாதிபதியின் வசீகரமும் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், எனது முந்தைய பதிவில் குறிப்பிட்ட ஜே.வி.பி. தலைவர்களின் அறிவிப்புகளின்படி, அவர்கள் தங்களது கொள்கையான 'ஒரு நாடு ஓர் அதிகாரம்' என்பதை நிலை நிறுத்துவதான தீர்மானங்கள்தான் முன்னெடுக்கப்படும் என்பதைத் தெளிவாக்குகிறார்கள். அந்த அரசியலுக்காக இந்தியாவின் பாதுகாப்பு அங்கலாய்ப்புகளுக்கு விட்டுக் கொடுத்து, இனப் பிரச்சினையை உள்நாட்டு விவகாரமாக விட்டுவிட வேண்டும் என்பதும், இந்தியாவின் பொருளாதார அபிவிருத்திகளுக்கு ஆதரவு தருவோம் என்ற தொனியில் 'நேச நாடுகள்', 'பிராந்திய முக்கியத்துவம்' என்ற சொல்லாடல்கள் பாவிக்கப்படுகின்றன என்பதும் தெரிகின்றன.

தாங்கள் இலங்கையில் அரசுரிமையைப் பெற்றால், வட இந்தியாவின் அரசு அதிகாரத்துக்குத் துணையாய் இருப்போம் என 1987 ஆம் ஆண்டு காலம் வரை சொல்லியவர்கள், தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாக அதனையே முன்னெடுப்பதும் புரிய வேண்டும். இந்த முயற்சிகளுக்கு எதிராகத் தமிழ் மக்களோ அன்றில் சிங்கள மக்களின் ஏதோ ஒரு பகுதியோ கிளர்ந்து எழுந்தாலும், 1983 – 1987 காலங்களில் அவர்களது தேசாபிமான அங்கத்தினர்கள் அவர்களைப் பாதுகாக்கப் போராடியமை போல இப்போது போராட வேண்டிய தேவை இல்லை. ஏனெனில் அவர்கள் ஓர் அரசாக, படையினரை இப்போது பாவிப்பார்கள். சட்ட ரீதியான நடவடிக்கைகளாக அவை முன்னெடுக்கப்படும்.

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

அதனால் வடக்கு மாகாணத்தில் காணிகளைக் கையகப்படுத்தும் திட்டம் இப்போது இருந்தாற்போல் தோன்றியது அல்ல என்பதைப் புரிய வேண்டும். ஜே.ஆர். பிரதேச சபைகள் குறித்து பேசிய போது ஜே.வி.பி. வெளியிட்ட அறிக்கைகளில் தெரிவித்த கொள்கைகள்தான் அது. அதுதான் மாகாண சபைகள் அமைக்கப்பட்ட போதும் பிரதிபலிக்கப் பட்டது. அப்படியான அமைப்புக்களால் இலங்கையின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கும், கடற்கரைகளை அடுத்த பகுதிகளில் மூன்றில் இரண்டு பங்கும், நாட்டில் எட்டில் ஒரு பங்கு கொண்ட தமிழ் மக்களின் கட்டுப்பாட்டிற்குப் போகும் என்பது அந்த எதிர்ப்புக் கொள்கைகளின் அடிப்படையாகும். அதுவே இப்போதைய அந்த வர்த்தமானி நடைமுறையாக்கத்தின் பின்னணி.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் தமிழ் மக்களின் 'வாழ்விடங்கள்', 'பாரம்பரிய பிரதேசங்கள்' என்றெல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள், இவர்களுக்கு முந்திய அரசின் ஏதோ ஒரு மனசாட்சியில் கணக்கெடுக்கப்பட்டவை என்பது ஜே.வி.பியின் கருத்து. இந்த அரசுக்கு அவையெல்லாம் ஒரு பொருட்டல்ல என்பதையே இந்த வர்த்தமானி



1989 நவம்பரில் றோஹண விஜவீரா கைதாகிக் கொல்லப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட படம்.

அறிவிப்புக் காட்டுகிறது.

நாங்கள் பதவிக்கு வந்தால் இராணுவத்தின் வசம் உள்ள காணிகளை விரைவில் விடுவிப்போம் என அவர்கள் தரப்பில் வாக்குறுதி தரப்பட்டாலும் அவர்கள் அரசுக்கு வந்து மாதங்கள் பல கடந்து விட்டன. வடக்கில் பல்லாயிரம் ஏக்கர் காணிகள் படையினர் மற்றும் பேரினத்தவர்களாலும், லட்சம் கடந்த ஏக்கர் காணிகள் வனத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றினாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இவற்றை மீள கையளிக்க எதுவித திட்டமும் இல்லை. நாடாளுமன்றத் தேர்தல் நாள்களில் புலோலியை அடுத்து தனியார் காணிகளில் இருந்த இராணுவ முகாமை அகற்ற இராணுவம்



1971 கிளர்ச்சியின் பின்னர் கொழும்பு தும்முல்லையில் குற்றவியல் நீதி ஆணைக்குழு விசாரணைகளை எதிர்நோக்கும் ஜே.வி.பி. தலைவர் றோஹண விஜயவீராவும், பிரின்ஸ் குணசேகராவும்.

ஒத்துக்கொண்ட செய்தி பரபரப்பாக்கப்பட்டது. பின் உள்ளூராட்சி தேர்தல் காலத்தில் இரண்டரைக் கிலோ மீற்றர் தூரத்துக்கான பலாலி வீதி பலத்த இராணுவ நிபந்தனைகளுடன் மக்கள் பாவனைக்குத் திறந்து விடுவது கொண்டாடப்பட்டது. அவை தவிர, தமிழ் மாகாணங்களுக்குள் அடங்கும் காணிகள் விடுவிப்புக்கு எதுவித நடவடிக்கைகளோ திட்டங்களோ இல்லை. இப்பொழுது காணி விடுவிப்புகளுக்கு ஆப்படிக்கும் விதத்தில் முன்னைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பலாலி வீதியைத் திறந்து விடுவது அல்லது அநேகமான காணிகளை மீளக் கையளிப்பது இராணுவத்தினரது பாதுகாப்பை உறுதிப்படுத்தாது, ஏனெனில் புலம்பெயர் மக்களுக்கு இரண்டு, மூன்று தற்கொலைப் படையினரை உருவாக்குவதற்கு நீண்ட நாள்கள் தேவையில்லை என்கிறார்.

அரசாங்கமோ, எல்லாவற்றையும் உடனடியாகச் செய்து விட முடியாது, படிப்படியாக, நிர்வாகக் கட்டமைப்புக்களை அனுசரித்து, சமாளித்துச் செய்ய வேண்டுமென தருணத்திற்கேற்ப விளக்கங்கள் தருகின்றது. ஆனால் தங்களின் கொள்கைகளின் பிரகாரம் தமிழ் மாகாணங்களுக்கான – தமிழ் மக்களுக்கு முன்னுரித்தான – காணிகள் என தாங்கள் கருதிக் கணக்கெடுத்து தீர்மானம் எடுக்க வேண்டியதில்லை, பாதுகாப்பு நிலைதான் முக்கியம் என நேரடியாகக் கூறுவதில்லை.

**ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற**
**உத்தமர்தம் உறவு வேண்டும்**
**உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்**
**உறவு கலவாமை வேண்டும்**
**பெருமைபெறும் நினது புகழ் பேசவேண்டும் பொய்மை**
**பேசா திருக்க வேண்டும்**
**பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய்**
**பிடியா திருக்க வேண்டும்**

– என வள்ளலார் அறிவுறுத்திச் சென்றார்.

கலிங்கத்தைக் கைப்பற்றிய சாம்ராட் அசோக மன்னர், அதன் விளைவுகளைக் கண்டு பௌத்த போதனைகளைத் தழுவி, அஹிம்சையை வளர்த்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

தார். இவர்களோ போரில் தாங்கள் பெற்ற வெற்றியின் விளைவுகள் பற்றி எதுவித கரிசனமும் இன்றி, அந்த வெற்றியை வருடா வருடம் கொண்டாடி, அது முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற மனோபாவங்களில் வாழ்கிறார்கள்.

நிதர்சனத்தில் இவர்களோடு தமிழ் மக்களது வாழ்வு இணைந்துள்ளது. ஆகவே அவர்களுடன் எப்படி வாழ்வது என்ற வாழ்வியலையும் தமிழ் மக்கள் அறிந்து, தங்களது அரசியலை முன்னெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தேசிய மக்கள் சக்தியின் பெரும் வெற்றிக்குப் பின், ஒரு சிங்களப் பெரும்பான்மை கட்சியாக அவர்கள் தமிழ்ப் பகுதிகளில் பெற்ற வெற்றிகளுக்கு கிடைத்த ஆதரவுக்கும் அவர்களால் தரப்படும் அணுகுமுறையும் வியாக்கியானங்களும் திருப்பித் தருவது கிடைத்த பாடம்தான் இது, அந்தப் பின்னடைவுகளின் இடையிலும் தமிழ் மக்கள் தங்களது தேசிய அபிலாசைகளில் இருந்து மாறவில்லை, அவர்களது அதிருப்திகளே வெளிப்படுத்தப்பட்டன என்ற விவாதத்தை வைக்கிறார்கள்.

மாற்றங்கள் தேவை என்ற அலையில் யாழ் மாவட்டத்தில் பெற்றுக்கொண்ட மூன்று ஆசனங்களைக் கொண்டு ஏதோ தமிழ் பகுதிகள் முழுவதையுமே வெற்றி கொண்ட எண்ணத்தில் தேசிய மக்கள் சக்தியின் அணுகுமுறை தெரிகிறது எனவும், அவர்களைப் போல (தேசிய மக்கள் சக்தி அரசு போல) முன்னைய அரசுகளும் தமிழ் மக்கள் தெரிவு செய்த சிலரை அனுசரணையாக்கி, அவர்களுக்கு சலுகைகள் தந்து, அவர்கள்தான் தலைவர்கள் என உலக அரங்குகளில் விளம்பரம் வைத்தார்கள்.



1971 ஏப்ரல் கிளர்ச்சியின் போது கைதான ஜே.வி.பி. உறுப்பினர்களில் ஒரு பகுதியினர்.

ஏமாற்றங்களைதான். யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் அவர்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்த மூன்று ஆசனங்களால், தமிழ் மக்கள் தங்களது தமிழ்த் தேசிய அபிலாசைகளைத் தூக்கி எறிந்து விட்டார்கள் என்ற பரப்புரையும், தாங்கள் பல தொகுதிகளில் பெற்ற வாக்கு விகிதாசாரங்கள் இதனை தெளிவுபடுத்துகின்றன என்ற நிலைப்பாடும்தான் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை.

தென்பகுதி மக்கள் தங்களது அரசியல் தலைவர்களில் விரக்தி அடைந்து, ஊழலற்ற, அதிகாரத்தை நேர்மையுடன் நடத்திக் செல்லக்கூடிய மாற்றுத் தலைவர்களைத் தேடியமை போல, தமிழ் மக்களும் காலங்காலமாகத் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர்களில் ஏமாற்றம் கண்டு, அந்த விரக்திகளில், குறிப்பாக – முன்பின் தெரிந்திராத அனுபவமற்ற இளைஞர்கள் – அநுரா ஜனாதிபதியான அலையில், மாற்றாக இவர்களைத் தெரிவு செய்தார்கள் என்பதில் இருக்கக்கூடிய உண்மையை தேசிய மக்கள் சக்தியினர் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகளோ, தங்களுக்கு அதனால் மக்களை ஆள முடிந்ததா? அந்த எடுபிடித் தலைவர்களையும் மக்கள் இந்தத் தேர்தலில் தோற்கடித்துப் பாடம் போதித்தார்கள். ஆகவே, இது மக்களால் தமது முன்னைய பிரதிநிதிகளில் இருந்த கசப்புணர்வின் வெளிப்பாடாகவும் அவர்களை மாற்ற வேண்டுமென்ற எண்ணத்திலேயன்றி மக்களின் அபிலாசைகளில் வந்த மாற்றம் அல்ல என்பதும் அவர்களது (தமிழர் தரப்பு அரசியல்வாதிகளின்) கருத்து.

இந்தப் பக்கச் சார்பான விவாதங்களின் பின்னணியில், உள்ளூராட்சி தேர்தலில், தமிழ் மக்கள் தங்களது தேசிய அபிலாசைகளையும் தங்களது வாழ்வு முறைகளையும் தாங்கள் தங்களது அதிகாரங்களால் நடைமுறைப்படுத்த வேண்டும் எனத் தெளிவு படுத்தி உள்ளனர்.

இந்தப் பக்கச் சார்பான, அன்றி அரசியல் ஆதாயங்களுக்கான ஆராய்வுகளைத் தள்ளி வைத்தாலும், இதன் இடையே இழையோடும் திட்டத்தை உதாசீனப்படுத்த முடியாது. இந்திய அரசாங்கத்துடன் செய்து கொண்ட – முக்கியமாகப் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் – பின் இந்தியா வழமையாக

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

சர்வதேசங்களில் கூட இனப்பிரச்சினைக்கான தீர்வாகவும் நாட்டுக்கான சமாதானத்தின் வழி எனப் பிரகடனப்படுத்தும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தையோ அல்லது அதனூடாக வந்த 13ஆம் திருத்தச் சட்டமூலத்தையோ பேச்சுப் பொருளாக வில்லை. பிரதமர் மோடி, இலங்கையின் தலைவர்கள் தாங்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவார்கள் எனத் தந்த உறுதி மொழியை நம்புவதாக மட்டுமே அறிவித்தார். ஆனால் தேர்தல் வெற்றிகளின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி, தமிழ் மக்கள் தங்களது தேசிய அபிலாசைகளைத் தூக்கி எறிந்து, அவர்களது கொள்கையான 'ஒரு நாடு – ஒரு மக்கள் – ஓர் அதிகாரம்' என்பதை ஏற்றுப் பயணிக்கிறார்கள், அதுதான் அவர்களது அபிலாசைகள், ஒரு நாட்டு மக்களாக நாங்கள் இதனை அடைந்து விட்டோம் எனக் கூறி, வதும், நாடு இருக்கும் நிலையில் சர்வதேசத்தின் கவனத்திற்கு வராமல் போகாது.

காணி அதிகாரங்களை பற்றி 13ஆம் திருத்தம் மூன்று பகுதிகளைக் குறிப்பிட்டது. அவை :-

ஒன்று – மாகாண சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள காணிகளுக்கு ஏற்ப அவற்றின் பாவிப்புக்கான சட்டமூலங்களை மாகாண சபைகளே கையாள்வது.

இரண்டு – இலங்கை (மத்திய) அரசும் மாகாண சபையும் இணைந்து சட்டமூலம் ஏற்படுத்தப்பட வேண்டிய காணிகள்.

மூன்றாவது – இலங்கையின் நாடாளுமன்றம் மட்டுமே பாவனைகளுக்கான சட்டமூலத்தை இயற்றக் கூடிய காணிகள்.

இவை மூன்றையும் கூட்டிப் பார்த்தாலும், இறுதியில் இலங்கை அரசின் நிலைமையில் நிர்வாக அதிகாரத்திற்கான நாட்டின் முழு காணிகளுமே



ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் ரோஹண விஜயவீர.

அவர்களது அபிலாசைகள் உள்நாட்டுக்குள்ளேயே தீர்வு செய்யப்பட்டன என்ற முடிவையும் மோடிக்கு அறிவிக்கலாம். மக்களை தங்களது கொள்கையான 'ஒரு நாடு – ஒரு மக்கள் – ஓர் அதிகாரம்' என்பதற்கு வழிப்படுத்துவது தேசிய மக்கள் கட்சியின் அரசியல் கோட்பாடுகளில் சரியானதாக இருக்கலாம். அது, ஜனநாயக வழிமுறைகள் பலவந்த மற்றவை என்பதனால் முதல் பார்வைகளில் அவை ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவை. ஆயின், அந்தக் கொள்கையை வலியுறுத்த அந்த வழிப்படுத்தலுக்காக சந்தர்ப்பவாத உறுதிமொழிகளைத் தருவது சாணக்கியமாக இருக்கலாம். ஆனால் அந்தப் போக்கு நல்லிணக்கத்திற்கான நாணயமாகாது.

அவற்றுக்கு மேலாக, நிறைவேற்றதிகாரங்களையும், நாடாளுமன்றப் பெரும்பான்மையையும் பாவித்து புதிய சட்டங்களை உருவாக்கி, வித்தியாசமான ஜனநாயகத்திற்கு வழி சமைப்பதும், பேச்சு சுதந்திரங்களை கட்டுப்படுத்துவதற்கு முனை அடங்குகின்றன. சாதாரண, சாதகமான வாக்கு வீதத்தால் தேசிய கொள்கைக்காக மூன்று காணிகளதும் பாவனைகள் தொடர்பாக அதிகாரம் செய்யலாம். அப்படி இருந்தும் 13-ஆம் திருத்தத்தின் காணி அதிகாரங்களை எதிர்த்தார்கள்.

ஏனெனில் நாட்டின் காணிகள் முழுவதுமே சிங்கள – பௌத்த அதிகாரத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்ற பேராண்மை தத்துவம்தான். அப்படி இருந்தும் 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவோம் என்ற உறுதிமொழிகள் தரப்பட்டன. இன்று வரை அந்த உறுதிமொழிகள் அந்தரத்தில் தொங்கி நிற்கின்றன.

அடுத்து – தடுத்து வைத்திருக்கப்படுபவர்கள் அரசியல் கைதிகளே, தாம் பதவிக்கு வந்ததும் அவர்களது விடுதலைகளை முன்னெடுப்போம் என்று பேசியவர்கள், மஹிந்த காலங்களில் கூட பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கத் துடித்த

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

வர்கள், இப்பொழுது பதவியில் அமர்ந்ததும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஆராய கமிஷன் நியமிக்கிறார்கள். அதுமட்டுமல்ல, கைதிகளை விடுவிப்பதில் சிக்கல்கள் உள்ளன என்கிறார்கள். ஏனெனில் அவர்கள் நீதிமன்றங்களால் குற்றவாளிகளாக காணப்பட்டு சிறைவாசம் அனுபவிப்பவர்கள், அவர்களை ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுவிப்பதில் சிக்கல்கள் உள்ளன, ஏனெனில் அவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக நாட்டின் பிரிவினைக்காகப் போராட்டத்தில் ஈடுபட்டு, பயங்கரவாதச் செயற்பாடுகளில் இருந்தவர்கள. (அவை என்னவோ தேர்தல் காலங்களில் தமக்குத் தெரியாதவை மாதிரி), ஆகவே அவற்றை ஆராய்ந்துதான் எதுவும் செய்ய முடியும் என விளக்கங்கள், வியாக்கியானங்கள் கூறப்பட்டு, விவகாரம் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

சொல்லியவற்ற செய்வதற்கு அரசியலில் மன உறுதியும், சொல்லியவற்றையோ பேசியவற்றையோ நிறைவேற்றும் மனோ சக்தி உள்ள சாமர்த்திய தலைமையும் இருக்க வேண்டும். அரசை வீழ்த்துவதற்கான ஆயுதப் புரட்சியின் பயங்கரவாதத்தில், வன்முறையில் ஈடுபட்டு, தேசத் துரோகத்திற்காக கைது செய்யப்பட்டு, குற்றவாளிகளாக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டு, சிறையில் வாடியவர்கள்தான் றோஹண விஜயவீராவும் அவரது சகாக்களும். ஆனால் 1977-இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன பதவியேற்ற போது, தனது முதலாளித்துவ கொள்கைகளுக்கு இவர்கள் எதிரானவர்கள், அரச துரோகத்தனத்திற்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவர்கள் எனத் தெரிந்தும் அவர்களை விடுதலை செய்தார்.

தமிழீழம் அமைப்பதற்கான ஆணையை தமிழ் மக்களிடமிருந்து ஏகோபித்த ஆதரவில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்றிருந்தது. அந்த ஆணை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஜே.ஆருக்கு இருந்தது. நாட்டுப் பிரிவினையையும் அதிகாரப் பரவலையும் வெளிப்படையாக – வன்மையாக – எதிர்த்த ஜே.வி.பி. தலைவர்கள் இதனைக் கையாள்வதற்கு உதவுவார்கள், அவர்களை அதற்குப் பயன்படுத்தலாம் என்ற தந்திரங்களும் இந்த விடுதலைகளில் ஜே.ஆருக்கு இருந்திருக்கலாம். ஆனால் தனது முதலாளித்துவ அரசை வீழ்த்துவதுதான் ஜே.வி.பியின் திட்டம் என்பதை அவர் தெளிவாக அறிந்திருந்தார். அப்படி இருந்தும் அவர்களை மன்னித்து விடுவிக்கும் அந்த சாணக்கியத்திற்கு மன உறுதி, துணிவு, சாமர்த்தியம் அவருக்கு இருந்தன.

ஆனால் இங்கு விடுதலைப் புலிகளும், ஆயுதப் போராட்டங்களும் இல்லாத நிலையில், கடிப்பதற்கு தேவையும் இல்லாமல், ஆனாலும் பல்லுகள் பிடுங்கப்பட்ட பாம்புகள் சிலவற்றை விடுவிக்க இங்கு திரிசங்கு நிலையில் உழன்று காலங்கள் நகர்கின்றன. அப்பொழுது சிறையில் இருந்து வாடிய விஜயவீராவினதும் அவரது சகாக்களினதும் குற்றங்களுக்கும் இன்று சிறையில் வாடும் தமிழ் கைதிகளுக்கும் அரசியல், சட்ட ரீதியாக வித்தியாசம் இல்லை.

அநுராவின் ஜே.வி.பியோ அல்லது தேசிய மக்கள் சக்தியோ இவற்றிற்காக இப்பொழுது பேசும் நியாயங்களில் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புகளுக்காக வந்த பொழுது இவர்களின் விடுதலை பற்றி காத்த மௌனங்களைப் புரிந்து கொண்டால், தேசிய மக்கள் சக்தியும் அதன் தலைவர்களும் 1977 இல் பதவியில் இருந்திருந்தால் விஜயவீரவும் சகாக்களும் விடுதலை பெற்றிருக்க முடியாது என்பது நிச்சயம்.

இந்த வித்தியாசத்துக்கு காரணம் என்ன? வாசகர்களின் ஊகத்துக்கே அதனை விட்டு விடுகிறேன்.

(தொடரும்)



கைதான ஜே.வி.பி. உறுப்பினர்கள் புனர்வாழ்வு முகாமில்.

# வவுனியா வடக்கில் பத்தாயிரம் ஏக்கர் காணி வனப் பகுதி என்ற பெயரில் விரைவில் சூறை?

## 5ஆம் திகதி வர்த்தமானி வருகின்றதா என சத்தியலிங்கம் கேள்வி

(கி.வசந்தன்)

எதிர்வரும் ஜுன் மாதம் 5 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வ தேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 10,000 ஏக்கர் காணி வனப் பகுதியாக பிரகடனப்படுத்தப்படவுள்ளதா என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.



வடக்கு - கிழக்கு காணி பிணக்குகள் தொடர்பான கூட்டமொன்று பிரதமர் ஹரினி அமரசூரிய தலைமையில் நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. இந்த விசேட கூட்டத்தில் விவசாய அமைச்சர் லால்காந்த, சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயரதிகாரிகள் மற்றும் வடக்கு கிழக்கைப் பிரதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இதன்போது அண்மையில் வெளியிடப்பட்ட காணிசுவீகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அங்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சத்தியலிங்கம் மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியால் வவுனியா மாவட்டத்தில் உள்ள வனப் பிரதேசத்தை பாதுகாப்பதற்காக அவ்வனத்தை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்த முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது. வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 10,000 ஏக்கர் காணியே வனப்பகுதியாக பிரகடனப்படுத்தப்படவுள்ளதாக அறிகின்றோம்.

ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களில் பெருமளவிலான பொதுமக்களிற்கு சொந்தமான காணிகள் உள்வாங்கப்பட்டிருந்தது. அவை இடம்பெயர்வுக்கு முன்பு மக்கள் குடியிருந்த மற்றும் அவர்களது பயன்பாட்டில் இருந்த காணிகளாகும். எனவே வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தவதற்கு முன்னர் பொதுமக்களின் பாவனையிலிருந்த காணிகளை அடையாளங் கண்டு அவற்றை முற்றாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், வவுனியா மாவட்டம் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் மாணிக்கம் பண்ணைப் பகுதியில் (மெனிக்பாம்) 2009 இறுதி யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டார்கள். 2010ம் ஆண்டுக்கு பின்னர் படிப்படியாக மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டு அங்கிருந்த மக்கள் முற்றாக வெளியேறிய நிலையில் கடந்த 15 வருடங்களாக இராணுவத்தினர் அந்தக் காணிகளை சுற்றி வேலிகள் அமைத்து பொதுமக்கள் உட் செல்வதற்கு தடை விதித்துள்ளமையுடன் அங்கு விவசாயப் பண்ணை அமைத்து பயிச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். உண்மையில் இந்தக்காணிகள் பொதுமக்களுக்கு சொந்தமானவை. அவை பலதரப்பட்ட காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள காணிகளாகும். எனவே மேற்படி காணிகளை விடுவித்து காணி உரிமையாளர்களிடம் மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வவுனியா நகரப்பகுதியில் மக்களுக்கு குடியிருப்பு தேவைக்காக 50 வருடங்களுக்கு முன்னர் காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. 50 வருடங்கள் கடந்துள்ள நிலையில் தற்போது மேற்படி காணிகளுக்கான உறுதி வழங்குவதற்கான வேலைகள் நடைபெறுகின்றன. காணி உறுதிக்கு விண்ணப்பிக்கும் போது நகர எல்லைக்குள் தலா 02 பரப்பு காணிக்கே குடியிருப்பதற்கான காணி உறுதி வழங்கலாமெனவும் மீதமுள்ள காணிக்கு விவசாய மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கான காணி உறுதியே வழங்கமுடியும் என்று கூறப்படுகின்றது. எனவே மேற்படி குடியிருப்பு தேவைக்காக வழங்கப்பட்ட காணி முழுவதிற்குமான உறுதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும். - என்றும் கேட்டுக் கொண்டார்.







# வவுனியா பழைய பஸ் நிலையம் அருகில் இருந்த அங்காடி வியாபார கொட்டகை நேற்று அகற்றம்

(கி.வசந்தன்)

வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் காணப்பட்ட அங்காடி வியாபாரக் கொட்டகை வவுனியா மாநகர சபையினால் நேற்றையதினம் அகற்றப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள தனிநாயகம் அடிகளாரின் சிலை அருகே செருப்பு தைக்கும் அங்காடி வியாபாரக் கொட்டகையில், இரவு வேளைகளில் தவறான நடவடிக்கை இடம் பெறுவதாகவும், அதனை சுற்றியுள்ள பகுதிகள் சுகாதார சீர்கேட்டிற்கு உட்படுவதாகவும் அப்பகுதி வர்த்தகர்கள், பொதுமக்கள் தரப்பில் வைக்கப்பட்ட முறைப்பாடுகளிற்கு அமைவாகவே இந்தக் கொட்டகை அகற்றப்பட்டு. பிறிதொரு இடம் தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்தது.

மேலும் அந்த அங்காடியில் தொழிலில் ஈடுபட்ட விசேட தேவைக்குட்பட்ட பெண்ணை, விசேட தேவைக்குட் பட்டவர்களைப் பராமரிக்கும் காப்பகத்தில் இணைப்பதற்கான நடவடிக்கை மாநகரசபை வருமானப் பரிசோதகரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்துக்கு எதிராக நேற்று பிரதேச செயலகம் முன் கவனவீர்ப்பு

புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலய நிர்வாக சபையினருக்கு எதிராக நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முற்பகல் வேலணைப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக புங்குடுதீவு மக்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள், தற்போதய ஆலய நிர்வாகம் உடன் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும் எனக் கோரினர்.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களால் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர் எதிர்வரும் 29ஆம் திகதி ஆலய நிர்வாக சபையினர் மற்றும் போராட்டத்தை முன்னெடுத்த மக்களை அழைத்து இது தொடர்பில் தாம் கலந்துரையாடுவார் எனர் தெரிவித்தார்.



















# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் ஆய்வரங்கு

கொழும்புத் தமிழ்ச் சங்கம் கடந்த சனிக்கிழமை 17ஆம் திகதி நடத்திய “இனவரைவியலும் இலக்கியமும்” தொடர்பான ஆய்வரங்கு “பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அரங்கில்” பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடைபெற்றது.

சட்டத்தரணி வினோதனி காசி விஸ்வநாதனின் தமிழ் வாழ்த்தைத் தொடர்ந்து தெ.மதுசூதனன் நோக்குரை ஆற்றினார்.

“இனவரைவியலும் இலக்கியமும்“ என்னும் தலைப்பில் வேளாண்மை காவியத்தை முன்னிறுத்திய உரையாடலை கிழக்கு பல்கலைக்கழகத்தை சேர்ந்த பாஸ்கரன் சுமன்,

“இனவரைவியல் நோக்கில் ஈழத்துத் தமிழ்க் கவிதைகள்“ என்னும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் த.அஜந்தகுமார் மற்றும் “மலையகத் தமிழர் இனவரைவியல் : பஞ்சம் பிழைக்க வந்த சீமை“யை முன்னிறுத்தி பேராதனைப் பல்கலைக்கழகம் முனைவர் எம்.எம்.ஜெயசீலன் ஆகியோர் உரையாற்றினர்.





# இன்றைய ராசி பலன்கள் - 24.05.2025




இன்று வளர்ச்சி காண்பீர்கள். இன்று பல பயனுள்ள விஷயங்களை செய்வீர்கள்.உங்கள்இனிமையானவார்த்தைகள் பிறரைக் கவரும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் பணிக்கான நன்மதிப்பும் அங்கீகாரமும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வுடன் இருப்பீர்கள். இருவரும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக இருக்கும் வாய்ப்பு உள்ளது. இன்று நீங்கள் முக்கிய முதலீட்டு முடிவுகளை எடுக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எந்த விதமான ஆரோக்கிய குறைபாடும் இருக்காது.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்கும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் அணுகுமுறையில் அமைதியும் எச்சரிக்கையும் தேவை. எதிர்பாரதவைகளைச் சந்திப்பீர்கள்.

பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். பணயில் வெற்றி காண புத்திசாலித்தனம் மற்றும் திறமைகளை பயன்படுத்துங்கள். எந்த சூழ்நிலையிலும் பதட்டமடையாதீர்கள். அதனால் உங்கள் ஆற்றல் குறைந்து விடும்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இருவரும் பிரச்சினைகளை தீர்க்க கலந்து ஆலோசிக்க வேண்டும். இதன் மூலம் இருவருக்கும் திருப்தி கிடைக்கும்.

இன்று நிதிநிலை சுமாரான பயனைத் தரும்.




இன்றைய நாள் வெற்றிகரமாக அமைய பொறுமையும் அமைதியும் தேவை. பதற்றப்படாமல் சகஜமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் நீங்கள் சில கஷ்டங்களை சந்திக்க நேரும். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் துணையிடம் அமைதியாகப் பேச வேண்டும். அதன் மூலம் அவர் உங்கள் மதிப்பை உணர்ந்து கொள்வார். நல்லுறவு ஏற்பட சரியான விதத்தில் உங்கள் அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

எதிர்பாராத செலவினங்கள் காரணமாக பணப்பற்றாக் குறை காணப்படும். எதிர் காலத்துக்கென சேமிக்கும் பழக்கம் கொண்டிருந்தால் இன்று மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமையை மேம்படுத்த வேண்டும்.பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் செயல்களில் தாமதங்களை சந்திக்க தயாராய் இருங்கள். திட்டமிடவேண்டியது அவசியம்.

சாதரணமாக ஆற்றும் பணிகளை விட இன்று சற்று கூடுதலான பணிகள் காணப்படும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை தவறில்லாமல் கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்த வேண்டும். இதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியுடன் இருக்கலாம். நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் சம்பாத்தியம் குறைந்து காணப்பட்டாலும் நீங்கள் சேமிக்கும் பழக்கம் கொள்வீர்கள். சேமித்த பணம் பற்றாக்குறை சமயத்தில் பலன் தரும்.




இன்று அனுகூலமான நாள். உங்கள் செயல்களில் முன்னேற்றம் காணும் நாள். உங்கள் சுய உந்துதலும் முயற்சியும் வெற்றியை பெற்றுத் தரும் நாள். உங்கள் அனைத்து செயல்களிலும் வெற்றி கிடைக்கும் நாள்.

உங்களுக்கு இன்று பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு வெளிச்சத்திற்கு வரும். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். குறைந்த நேரத்தில் தரமாக பணிகளை முடித்து தருவீர்கள்.

உங்கள் அன்பில் உங்கள் துணை மயங்குவார். அவருக்கு கிடைத்த முக்கியத்துவத்துக்கு மகிழ்ச்சியடைவார். இதன் மூலம் உறவு வலுப்படும்.

உங்கள் நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. பொறுமையுடன் இருக்க வேண்டும். உங்கள் விருப்பங்கள் நிறைவேற காத்திருங்கள்.

யாரும் உங்கள் பணிகளை கவனிக்காவிட்டாலும் தரமான பணி–களை வழங்குங்கள். உங்கள் பணிக்கான பாராட்டு இப்பொழுதில்லாவிட்டாலும் பிறகு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் பழகும் போது பொறுமை தேவை. நட்புடன் அவருக்கு விஷயங்களை புரிய வைக்க வேண்டும். உங்கள் உறவின் மகிழ்ச்சி முழுதும் உங்கள் கைகளில் தான் உள்ளது.

இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய முடிந்த அளவு செலவை கட்டுப்படுத்த வேண்டும்.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும். முக்கிய முடிவுகளை வேறு சமயத்துக்குத் தள்ளிப் போடுங்கள். உங்கள் தகவல் பரிமாற்ற திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை தரமானதாக குறித்தநேரத்தில் வழங்குவது உங்கள் கைகளில் தான் உள்ளது.இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடுங்கள். கவனச்சிதறலின்றி பணியாற்றுங்கள்.

உங்கள் திருமண வாழ்க்கை சிறப்பாக அமைய இருவரும் சமமாக பொறுப்பேற்று செயல்பட வேண்டும். இருவரும் நட்புடன் இருந்தால் அனைத்தும் சிறப்பாக இருக்கும்.

பண விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். எவ்வளவு கவனமாக இருக்கிறீர்களோ அந்த அளவு பாதுகாப்பாக இருப்பீர்கள்.




முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உங்களை எப்பொழுதும் உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள்.

இன்று தவறுகள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதால் கவனமுடன் பணியாற்றவும். அர்ப்பணிப்புடன் பணியாற்றி உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுங்கள்.

இருவரும் எப்பொழுதும் உங்கள் கருத்துகளை சிறப்பாக பரிமாறிக் கொள்ள வேண்டும். எதைச் சொல்வதாக இருந்தாலும் அன்பாக அமைதியாக கூற வேண்டும்.

பணம் வந்து போகும். பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

ஆரோக்கியமில்லாத உணவை உண்ணாதீர்கள். எண்ணெய் மற்றும் கார உணவுகள் உங்கள் முகத்தின் தோலை பாதிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.05.2025




இன்று உங்களுக்கு அனுகூல மான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உங்கள் உறுதியும் தைரிய மும் உங்களை முன்னேற்றும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகள் உங்கள் பணியை பாராட்டுவார்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

சொல்லிலும் செயலிலும் உங்கள் துணையிடம் நீங்கள் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவர் மகிழ்வார். உறவு வலுப்படும்.

இன்று உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். இன்று நிதிநிலை சுதந்திரமாக இருக்கும்.

உங்கள் விருப்பபடி அனைத்தும் நடக்கும். நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் அமைதியாக இருக்க பிரார்த்தனை மற்றும் தியா னம் மேற்கொள்ளுங்கள். அனைத்து சூழ்நிலைகளையும் நீங்கள் சமாளிக்க தியானம் உங்களுக்கு மிகவும் உதவி கரமாக இருக்கும்.

பணியாற்றும் பாணியில் கவனமாக இருங்கள். பணிகள் சிறிது அதிகமாக காணப்படும். அதனை நம்பிக்கையுடன் எற்றுக் கொண்டு சிறப்பாக ஆற்றுங்கள்.

உங்கள் இருவரிடையே சிறந்த தகவல் பரிமாற்றம் மற்றும் தெளிவு தேவை. இதன் மூலம் இருவர் உறவி லும் ஆர்வம் குறையாமல் இனிமை நிறைந்திருக்கும்.

ஏழைக்கு பண உதவி செய்வதன் மூலம் உங்களுக் கும் உங்கள் துணைக்கும் நல்ல பலன் கிடைக்கும். முன்னோர்களின் சாந்திக்கு சடங்குகள் செய்ய பணம் செலவழிப்பீர்கள்.




இன்று உங்களுக்கு வெற்றிகர மான நாள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நாள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி களை தைரியமாக மேற்கொண்டு சிறப்பாக ஆற்றுங்கள். உங்கள் திறமைகளை காட்டுவதில் முனைப்பாக இருப்ப தன் காரணமாக இன்று முழுவதும் பணியில் மூழ்கி இருப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் கட்டுப்பாடுடனும் பக்குவமாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவுப் பிணைப்பு செழிப்பாக இருக்கும். இன்றைய நாளை மறக்க முடியாத நாளாக ஆக்க இருவரும் வெளியி டங்களுக்குச் சேர்ந்து செல்லுங்கள்.




வாழ்வில் உங்கள் பொறுப்புகள் அதிகமாகும். இது உங்களுக்கு சிறிது பதற்றத்தை ஏற்படுத்தும். குழப்பம் ஏற்படாதபடி தெளிவான இலக்குகளை அமைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பணிக்கு இப்பொழுது சிறந்த அங்கீகாரம் கிடைக்காது. என்றாலும் நீங்கள் அர்ப் பணிப்புடன் பணியாற்றினால் நீங்கள் நினைத்ததைவிட விரைவில் அங்கீகாரம் பெறுவீர்கள். நல்ல நேரம் காத்தி ருக்கிறது என்பதை மனதில் கொள்ளுங்கள். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது வார்த்தைகளை தேர்ந்தெடுத்து பேசுங்கள். பக்குவமாகவும் நட்புடனும் நடந்து கொண்டால் நல்ல புரிந்துணர்வு வளரும்.

உங்கள் செலவுகள் குறைந்து சேமிப்பு அதிகரிக்க பரிகாரம் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சீன நாட்டுப் பேராசிரியர் சிறப்புரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறையின் ஏற்பாட்டில் நடைபெற்ற கருத்தரங்கில் சீன நாட்டுப் பேராசிரியர் ஹீ யான்கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியள வில் இந்தச் சிறப்புரை இடம்பெற்றது.

“சீனாவின் விரைவான பொருளா தார வளர்ச்சி மற்றும் முழுமையான வறுமை ஒழிப்பு: இலங்கைக்கான பாடங்கள்” எனும் தலைப்பில் இந்த உரை நிகழ்த்தப்பட்டது.





சிறப்புரை அமர்வில் பங்கேற்ற வர்கள் இறுதியில் கேள்வி கேட்பதற்கு சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது. நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

சீனாவின் தலைநகரான பீஜிங்கில் உள்ள சிங்குவா பல்கலைக்கழகத்தில் சர்வதேச பகுதி ஆய்வுகள் கற்கை நிறு வனத்தின் உதவி பேராசிரியராக ஹீ யான் செயற்படுகிறார் என்பது குறிப்பிடத்-தக்கது.







